DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.156/2018

Deposition of witness: LW2/PW6

| | | | |
|---|---|---|---|
| Name | காஞ்சனா | Taluk | |
| Husband's Name | நடராஜன் | Village | |
| Age | 50 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **03.08.2026.** | | | |

**(Accused 1 to 3 present)**

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr–I 1724அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பண்ருட்டி, திருவதிகையில் வசித்து தற்போது குடும்ப தலைவியாக இரந்து வருகிறேன். அ.சா–1 நடராஜன் எனது கணவர். அ.சா–2 மூர்த்தி, அ.சா–3 ஆறுமுகம் ஆகியோர்கள் எனது கொழுந்தனார்கள். அ.சா–4 பாலமுருகன் எனது பங்காளிமுறை உறவினர் ஆவார். அ.சா–5 ஜெயகணேஷ் எனது மகன். பட்டியல் சாட்சி தினேஷ் எனது கொழுந்தனார் மகன். ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள். கடந்த 14.08.2018 அன்று, மாலை சுமார் 3.30 மணியளவில், எங்களுக்கு சொந்தமான இடத்தில் உள்ள, எங்களது வீட்டில் பூசுவேலை செய்துக்கொண்டிருந்தோம். அப்போது, ஆஜர் எதிரிகளான கிருஷ்ணமூர்த்தி, குப்புசாமி, ஏழுமலை ஆகியோர்களும், அவர்களுடன் மணி, த.பெ.நாராயணசாமி, திருவதிகை என்பவரும் மேற்படி பூசுவேலை நடந்துக்கொண்டிருந்த இடத்திற்கு வந்து, எனது கணவர் நடராஜனை பார்த்து, ஏன் எங்கள் இடத்தில் வேலை செய்துக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டதற்கு, எனது கணவர் அவர்களை பார்த்து, நான் எனது இடத்தில்தான் வேலை செய்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார். உடனே, எதிரி குப்புசாமியும், ராஜேஷ் த.பெ.ராமசாமி, திருவதிகை என்பவரும், அருண் த.பெ. குப்புசாமி (எதிரி), திருவதிகை என்பவரும் கத்தி, அருவாமனை ஆகியவற்றை எடுத்துவந்து, எனது கணவரின் இடதுதோள்பட்டையில், எதிரி குப்புசாமி வெட்டிவிட்டார். அப்போது, எதிரி குப்புசாமி, எனது கணவரை வெட்டும்போது, மேற்சொன்ன நபர்களான அருண் மற்றும் ராஜேஷ் எனது கணவர் நடராஜனை பிடித்துக்கொண்டார்கள். மேற்படி சண்டையை நானும், எனது கொழுந்தனார் மூர்த்தியும் மறிக்கச்சென்றபோது, எதிரி ஏழுமலை, எதிரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் மேற்சொன்ன நபரான மணி என்பவரும் எனது கொழுந்தனார் மூர்த்தியின் கை, கால்களை பிடித்துக்கொண்டார்கள். அப்போது, மேற்சொன்ன ராஜேஷ் என்பவர் எனது கொழுந்தனார் மூர்த்தியின் இடது உள்ளங்கையில் கத்தியால் வெட்டிவிட்டார். எனது மகன் ஜெயகணேஷை, பிரபா த.பெ.வீரப்பன், திருவதிகை என்பவர் தடியால் வலதுபக்க மண்டையில் அடித்தார், எனது மகன் ஜெயகணேஷை, மேற்சொன்ன ராஜேஷ் தடியால் இடதுபக்க மண்டையில் அடித்தார், எனது மகன் ஜெயகணேஷை, எதிரி குப்புசாமி கத்தியால் இடதுபக்க தோள்பட்டைக்கு கீழ் இடதுகையில் வெட்டினார். மேற்படி சண்டையை நான் மறித்தபோது, மேற்சொன்ன கிருஷ்ணமூர்த்தி, ஏழுமலை, மணி, குப்புசாமி ஆகியோர்கள் என்னை பிடித்து தள்ளிவிட்டு, கத்திபிடியால் எனது இடது இடுப்பில் குப்புசாமி அடித்தார். எனது சின்ன

கொழுந்தனார் ஆறுமுகத்தை, எதிரி ஏழுமலை தடியால் ஆறுமுகத்தின் தலையில் பின்புறத்தில் அடித்தார். காயம்பட்ட நானும், எனது கணவர் நடராஜனும், எங்கள் மகன் ஜெயகணேசும், எனது கொழுந்தனார்கள் மூர்த்தி, ஆறுமுகம் ஆகியோர்கள் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டோம். மேற்படி தற்போது நீதிமன்றத்தில் உள்ள தடி, அரிவாள்மனை, கத்தியால் தான் மேற்படி நபர்கள் எங்களை தாக்கினார்கள். **மேற்படி தடி அ.சா.பொ–1 ஆகவும், மேற்படி கத்தி அ.சா.பொ–2 ஆகவும், (மகசரில் குறிப்பிட்டுள்ள அளவிற்கும், மேற்படி அ.சா.பொ–1 மற்றும் அ.சா.பொ–2 நேரில் காணும் அளவிற்கும் வித்தியாசம் இருப்பதாக குறிப்பிட்டு, எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அரிவாள்மனை அ.சா.பொ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தொடர்பாக உரிமையியல் வழக்கு எதிரிகளால் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போலீசார் எப்போது வந்தார்கள் என்றால், வழக்கு சம்பவம் நடந்ததற்கு மறுநாள் காலை, 7.00 மணியளவில் போலீசார் வந்தார்கள். நாங்கள் வழக்கு சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்கு எப்போது காவல் நிலையம் சென்றோம் என்றால், வழக்கு சம்பவம் நடந்து மறுநாள் காலை 8.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு நான், எனது கணவர் நடராஜன், என் மகன் ஜெயகணேஷ், எனது கொழுந்தனார்கள் மூர்த்தி, ஆறுமுகம் ஆகியோர் சென்றோம். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக யார் புகார் கொடுத்தார் என்றால், நான் தான் கொடுத்தேன். மேற்படி புகாரை யார் எழுதினார்கள் என்றால், போலீஸ் எழுதினார்கள். எந்த போலீஸ் எழுதினார் என்றால், SI எழுதினார். மேற்படி புகாரை நான் படித்துப்பார்த்தேனா என்றால், நான் படித்து பார்க்கவில்லை, ஆனால் எனது கொழுந்தனார்களிடம் படித்துக்காட்டினார்கள், அதில் நான் தான் கையொப்பமிட்டேன். எங்களை எதிரிகள் தாக்கியதாக சொல்லப்படும் நிலையில் அது தொடர்பாக நாங்கள் மருத்துவமனைக்கு சென்றபோது, மேற்படி எங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி யார் மருத்துவரிடம் கூறினார் என்றால், நான்தான் கூறினேன். மருத்துவரிடம் எங்களை 5 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அந்த விவரத்தை போலீஸ் விசாரணையிலும், நாங்கள் கொடுத்த புகார் மனுவிலும் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

2. நாங்கள் காவல் நிலையம் சென்றபோது எங்களை போலீசார் விசாரித்ததற்கு பிறகு வேறு எப்போதும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சான்று பொருட்கள் 1 முதல் 3 வரையிலானவற்றை, யார் போலீசாரிடம் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இவ்வழக்கின் சான்று பொருட்கள் 1 முதல் 3 வரையிலானவற்றை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மகசரில், தடியின்

நீளம் 35 செ.மீ என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும், ஆனால், உண்மையிலேயே அ.சா.பொ–1, சுமார் 1 மீட்டர் அளவில் உள்ளது என்றாலும், அ.சா.பொ–2 கத்தி சுமார் 19 செ.மீட்டர் அளவில் உள்ளதாக மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் உண்மையில் அதன் நீளம் 13 செ.மீ நீளம் தான் உள்ளது என்றாலும், அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனவே மேற்படி சான்றுபொருட்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக பொய்யாக தவறான முறையில், போலீசாரால் ஜோடிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. CC 39/2019, Cr.No.438/2018 என்ற வழக்கு எதிரிகள், எனது கணவர் மற்றும் கொழுந்தனார்களுக்கு எதிராக கொடுத்து அது நிலுவையில் இந்த நீதிமன்றத்தில் உள்ளது என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தனியாருக்கு சொந்தமான இடம் என்றாலும், அது ஒரு பொது இடம் இல்லை என்றாலும் சரிதான். மேற்படி சம்பவத்தில் எதிரிகள் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், இரத்தம் வந்து, அது துணிகளில் பட்டதா என்றால் பட்டது. அவற்றை போலீசார் பார்த்தனரா என்றால் பார்த்தனர். மேற்படி துணிகளை நாங்கள் போலீசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை, அவை ரத்தக்கரை படிந்தவையாக இருந்ததனால், அவற்றை கொளுத்திவிட்டோம். எங்களை போலீசார் தான் கொளுத்த சொன்னார்களா என்றால் இல்லை, நாங்கள் தான் கொளுத்தினோம்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்றே எதிரிகளை போலீசார் கைது செய்தனரா என்றால் கைது செய்தார்கள். நாங்கள் எப்போது மேற்படி சம்பவம் தொடர்பாக மருத்துவமனைக்கு சென்றோம் என்றால், சம்பவம் நடந்த தினத்தன்று மாலை சுமார் 4 – 4:30 மணி அளவில் சென்றோம். இந்த வழக்கில் சாட்சிகளாக உள்ள நபர்கள் எங்களுக்கு நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று, பூசுவேலை நடந்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அங்கு அன்று எத்தனை கொத்தனார் மற்றும் சித்தாட்கள் வேலை செய்தார்கள் என்றால், 3 கொத்தனார் வேலை செய்தார்கள், சித்தாட்கள் யாரும் இல்லை, நாங்களே மேல் வேலை செய்தோம். அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் ஒரு கொத்தனார் மட்டும் திருவதிகையை சேர்ந்தவர் மற்றவர்கள் கடலூரை சேர்ந்தவர்கள். மேற்படி இவ்வழக்கு சம்பவம் நடந்தது தொடர்பாக, மேற்படி கொத்தனார்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். போலீசார் அவர்களை அழைத்து விசாரணை செய்தார்களா என்றால், மேற்படி சண்டையை பார்த்த உடனேயே கொத்தனார் அனைவரும் வேலை செய்யும் இடத்தை விட்டு கிளம்பிவிட்டார்கள், போலீசார் எங்களை மறுநாள் வந்து தான் விசாரணை செய்தார்கள், அப்போது கொத்தனார் அங்கு இல்லை. எங்கள் வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. அக்கம் பக்கம் இருந்தவர்களுக்கு இவ்வழக்கு சம்பவம் நடந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியும். ராஜேஷ், த.பெ.ராமசாமி, அருண், த.பெ.குப்புசமி மற்றும் மணி, த.பெ.நாராயணன் ஆகியோர்கள் எங்களை தாக்கியதாக முதல் விசாரணையில் நான் கூறியுள்ள விவரங்களை, போலீசார் விசாரிக்கும்போது

கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அருணும், ராஜேஷ்–ம் எனது வீட்டுக்காரர் நடராஜனை பிடித்துக் கொண்டதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை, போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சண்டை நடந்த போது நானும், எனது கொழுந்தனார் மூர்த்தியும் தடுத்ததாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை போலீசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பிரபா என்பவர் தாக்கியதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள அனைத்து விபரங்களையும் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். உண்மையிலேயே வழக்கு சம்பவம் நடைபெறவே இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்ட பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டியவர்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**